**செய்தி வெளியீடு எண்:713** **நாள்:02.11.2007**

# செய்தி வெளியீடு

திருமதி. மதுமிதா தத்தா, சென்னை, தமிழ்நாடு தகவல் வழங்கும் உரிமைச் சட்டம் 2005ன் படி தொழில் துறை தகவல் வழங்கும் அலுவருக்கு தனது 8.12.2006 நாளிட்ட கடிதத்தில் தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள் தொடர்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை கோரினார்.

1. தமிழ்நாட்டில் ஒப்புதல் வழங்கப்பட்ட சிறப்பு பொருளாதார மண்டலங்களின் விவரங்கள்

2. நிலுவையில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்களின் விவரங்கள்,

3. சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைக்க விரும்பும் தொழில் முனைவோர்களின் விவரங்கள்

4. திட்ட அறிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விபரங்கள்.

5. இப்பொருள் சம்பந்தமான அனைத்து கோப்புகளையும் பார்வையிட அனுமதித்தல்

விண்ணப்பதாரரின் கடிதம் அரசுக்கு கிடைக்காததால், விண்ணப்பதாரரின் கடித நகல் 7–5–2007 அன்று பெறப்பட்டு விண்ணப்பதாரருக்கு அவர் கோரிய அனைத்து தகவல்களும் 13.7.2007 நாளிட்ட அரசு கடிதத்தில் வழங்கப்பட்டது.

2. அதன்பின் 16.7.2007 அன்று தகவல் வழங்கும் அதிகாரி தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்பு ஆஜராகி இக்கடிதத்தின் நகலையும் அத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து விபரங்களையும் வழங்கினார். அதன்பின் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணைப்படி 17–9–2007 மற்றும் 18–9–2007

ஆகிய நாட்களில் ஆவணங்களை பார்வையிட விண்ணப்பதாரர் அனுமதிக்கப்பட்டார். ஆவணங்களை பார்வையிட்ட பிறகு விண்ணப்பதாரர் தகவல் வழங்கும் அதிகாரியிடம் தனியார் நிறுவனங்களின் திட்ட அறிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவைகளின் நகல்களை தனக்கு வழங்கும்படி கேட்டார். இந்நகல்களை தகவல் வழங்கும் அதிகாரிக்கு விண்ணப்பதாரர் ஏற்கனவே தான் கொடுத்த விண்ணப்பத்தில் கேட்காததால் புதியதாக ஒரு விண்ணப்பத்தை வழங்கும்படியும் அதனை ஆய்வு செய்வதாகவும் தகவல் வழங்கும் அதிகாரி விண்ணப்பதாரரிடம் தெரிவித்தார்.

விண்ணப்பதாரரின் புகாரின் அடிப்படையில் தமிழ்நாடு தகவல் ஆணையம் தகவல் வழங்கும் அலுவலரை 4–10–2007 அன்று ஆணையத்தில் ஆஜராகும்படி ஆணை பிறப்பித்தது. அன்று 8–10–2007 மற்றும் 9–10–2007 ஆகிய நாட்களில் சிறப்பு பொருளாதார மண்டலங்களின் விபரங்கள் / தனியார் நிறுவனங்களின் திட்ட அறிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அனைத்தும் கொண்ட மூலக்கோப்புகளை தகவல் ஆணையத்திற்கு கொண்டு வரும்படியும் விண்ணப்பதாரருக்கு பார்வையிடவும் நகல் எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவும் தமிழ்நாடு தகவல் ஆணையம் தகவல் வழங்கும் அதிகாரிக்கு ஆணையிட்டது .

தனியார் நிறுவனங்களின் திட்ட அறிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவை தகவல் வழங்கும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 8 (டி) (இ) மற்றும் பிரிவு 11 படி இந்த ஆவணங்கள் தனியருக்கு வழங்குவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால் இந்த ஆவணங்களை உடனடியாக

வழங்க இயலாத நிலை உள்ளது எனவும், இதுசம்பந்தமாக தனியார் நிறுவனங்களின் அனுமதி பெற்ற பின்பே இந்த ஆவணங்களை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு கொண்டுவர முடியும் என தகவல் வழங்கும் அதிகாரி 5-10-2007 நாளிட்ட தனது கடிதத்தில் தகவல் ஆணையத்திற்கு தெரிவித்தார். இது சம்பந்தமாக தகவல் ஆணையம் தொழில் துறை செயலர் அவர்களுக்கு 10-10-2007 நாளிட்ட தனது ஆணையில் 26-10-2007 க்குள் தகவல் ஆணையத்திற்கு தகவல் ஆணையம் கோரிய ஆவணங்களை வழங்காததற்கு எழுத்து மூலமான பதிலும் மற்றும் 30-10-2007 காலை 10.00 மணிக்கு அனைத்து ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சமர்ப்பிக்கும்படியும் ஆணையிட்டது.

ஆனால், தனியார் நிறுவனங்களின் திட்ட அறிக்கைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகிய ஆவணங்கள் தகவல் வழங்கும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 8 (டி) (இ) மற்றும் பிரிவு 11ன்படி தனியருக்கு வழங்குவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதால் தகவல் ஆணையத்தின் ஆணைப்படி இந்த ஆவணங்களை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு வழங்க முடியவில்லை. தனியார் நிறுவனங்கள் தங்களது திட்ட அறிக்கைகளை விண்ணப்பதாரருக்கு வழங்கக் கூடாது என தகவல் வழங்கும் அதிகாரிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர். எனவே, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையை செயல்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளதால் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை (எண் 33936/2007) தாக்கல்

செய்யப்பட்டது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இதன் மீது **26–10–2007** அன்று இடைக்கால தடையாணை விதித்துள்ளது. இப்பொருள் தற்பொழுது நீதிமன்ற விசாரணைக்குட்பட்டுள்ளதால், மேலும் விரிவான தகவல்கள் வழங்க முடியாத நிலை உள்ளது.

தமிழ்நாட்டில் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அரசு நிறுவனங்களாலும், தனியார் அமைப்புகளாலும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

தனியார் நிறுவனங்களால் அமைக்கப்படும் சிறப்பு பொருளாதார மண்டலங்களில், அனைத்து நிலங்களும் தனியார் நிறுவனங்களால் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகிறது. இவற்றிற்கு அரசு, நில ஆர்சிதம் செய்து நிலம் வழங்குவதில்லை. அரசு நிறுவனங்களாகிய **SIPCOT, TIDCO** போன்ற நிறுவனங்கள் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைக்க விழையும் போது, அரசு புறம்போக்கு நிலங்களை வழங்கியும், தேவைக்கேற்ப முன்னரே ஆர்சிதம் செய்யப்பட்ட பட்டா நிலங்களையும் வழங்கி வந்துள்ளது.

எனவே, சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அமைவதற்கு நிலம் வழங்குவதில் முறைகேடுகள் நடந்துள்ளதென குற்றம் சாட்டுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது மற்றும் அடிப்படை ஆதாரமற்றது.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**